| | | |
|---|---|---|
| | மாகாணக் கல்வித் திணைக்களம்<br>வடக்கு மாகாணம்<br>**Provincial Department of Education, Northern Province** | |

மாதாந்த மதிப்பீடு

| தரம் - 07 | குடியியற்கல்வி | யூலை– 2022 |
|---|---|---|

## பகுதி I

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

01. மனிதன் பிறந்ததும் முதன் முதலில் உறுப்பினராகும் சமூக அலகு
    1. கோயில் 2. வைத்தியசாலை 3. குடும்பம் 4. பள்ளிவாசல்

02. தனிக்குடும்ப அமைப்பில் உள்ளடங்காதவர்
    1. அப்பா 2. அம்மா 3. பிள்ளை 4. அம்மம்மா

03. குடும்ப உறுப்பினர்கள் இணைந்து காணப்படும் பண்பு அல்லாதது
    1. அன்பு 2. கோபம் 3. கருணை 4. பாசம்

04. குறிக்கோளை அடைவதற்குத் தேவைப்படும் நடைமுறைகளுள் சரியானது.
    1. தினமும் பாடசாலைக்கு செல்லாமை.
    2. தனியார் வகுப்புகளுக்கு செல்வதில் ஈடுபாடு காட்டுதல்.
    3. கால அட்டவணைக்கேற்ப கற்றல் செயற்பாடுகளில் ஈடுபாடில்லாமை
    4. ஆசிரியர்களின் ஆலோசனையை ஏற்று நடாத்துதல்

05. மனிதர்களிடம் காணப்படும் பலவீனமான குணங்களில் ஒன்று.
    1. சரியான முடிவெடுக்கும் ஆற்றல்.
    2. சரியான முடிவெடுக்கும் ஆற்றலின்மை.
    3. முற்கோபமும் பொறுமையின்மையும்
    4. பிறரின் கருத்துக்களுக்கு செவிசாய்க்காமை

06. உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமற்றது.
    1. குடும்பம் 2. நல்ல நண்பர்களும் தீய நண்பர்களும்
    3. நல்ல பாடசாலை 4. நல்ல நூல்கள்

07. இலத்திரனியல் ஊடகம் அல்லாதது.
    1. தொலைக்காட்சி 2. இணையம் 3. பத்திரிகை 4. வானொலி

08. சமூக நன்மைக்கு பாதகமாக அமைவது.
    1. சனசமூக நிலையங்கள் 2. போதைப் பொருள் மையங்கள்
    3 புகைத்தல் தடுப்பு இயக்கங்கள் 4. நூலகங்கள்

09. விளையாட்டின் மூலம் விருத்தியடைகின்ற பண்பு
    1. கட்டளைகளைப் பின்பற்றுதல். 2. பின் வாங்குதல்
    3. தோல்வியை ஏற்றுக்கொள்ளாமை 4. குழு உணர்வுடன் செயற்படாமை

10. பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளை கட்டுப்படுத்திக்கொள்ள பொருத்தமற்ற செயற்பாடு
    1. சமயச் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டுதல்
    2. கவிதை, பாட்டுப்பாடல்
    3. விளையாட்டில் ஈடுபடல்
    4. தொலைக்காட்சி நாடகங்களை தொடர்ச்சியாகப் பார்வையிடுதல்

11. குடும்பத்தின் மூலமான உரிமைகளல்லாதது
   1. உணவும், போசனையும்   2. பெற்றோரின் அன்பும் அரவணைப்பும்
   3 கல்வியைப் பெற்றுக்கொள்ளல்   4. பெற்றோரை புறக்கணித்தல்

12. நற்பிரஜை ஒருவரின் குணவியல்புகள்
   1. சுயமாக தீர்மானம் எடுத்தல்.   2. கலந்துரையாடி தீர்மானம் எடுத்தல்
   3 எளிமையற்ற வாழ்க்கை முறை   4. நட்புறவற்ற தன்மை

13. சமூக வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தாதது
   1. பொருத்தமற்ற முறையில் கழிவுப் பொருட்களை அகற்றுதல்.
   2. அதிக ஒலியுடன் வானொலி
   3. அதிக ஒலியுடன் தொலைக்காட்சி
   4. வீதியில் குப்பை கூளங்களை அகற்றுதல்.

14. உங்கள் தந்தையின் தம்பியின் மகள்
   1. சகோதரி   2. மச்சாள்   3. சின்னம்மா   4. மதினி

15. உங்கள் தாயின் அண்ணாவின் மனைவி
   1. மாமி   2. சின்னம்மா   3. சகோதரி   4. மதினி

## பகுதி II

**01.**

I. கருக்குடும்பம் என்றால் என்ன?
II. விரிந்த குடும்பத்தின் சிறப்பம்சங்கள் இரண்டு தருக?
III. குடும்பமாக வாழும் போது கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக?

**02.**

I. உமது குறிக்கோள் ஒன்றை விளக்குக?
II. அக்குறிக்கோளை அடைவதற்கான செயற்பாடுகள் இரண்டைத் தருக?
III. ஒவ்வொரு மனிதனதும் தனித்துவமான அடையாளத்தை வேறுபடுத்தும் மூன்று பண்புகள் / காரணிகள் யாவை?

**03.**

I. உமக்கு விருப்பமான அழகியற் செயற்பாடுகள் ஒன்றைக் குறிப்பிடுக?
II. அழகியற் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் கிடைக்கும் பயன்கள் இரண்டைத் தருக?
III. விளையாட்டில் ஈடுபடுவதனால் ஒருவரிடத்தில் விருத்தியடைகின்ற பண்புகள் மூன்று தருக?

**04.**

I. எவையேனும் மனவெழுச்சிப் பண்புகள் மூன்று தருக?
II. பொருத்தமற்ற மனவெழுச்சிப் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
III. மனவெழுச்சிப் பண்புகளை ஆக்க பூர்வமாகப் பயன்படுத்துவதற்குரிய வழிகள் இரண்டைக் குறிப்பிடுக?

**05.**

I. உமது சமூகத்தில் / கிராமத்தில் பின்பற்றப்படுகின்ற சம்பிரதாயங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
II. அயலவர்களுடன் நட்புறவைப் பேணும் சந்தர்ப்பங்கள் 3 தருக?
III. நற்பிரஜையான உம்மிடமுள்ள சிறந்த பண்பு ஒன்றைக் குறிப்பிட்டு விளக்குக?